

அமரர்

# திருமதி செளந்தர நாயகி கிருஷ்ணபிள்ளை


அவர்களின்

# செளந்தரிய மலர்

13-05-2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# திருமதி சௌந்தர நாயகி கிருஷ்ணபிள்ளை

அவர்களின்

# சௌந்தரிய மலர்

# நினைவுப் பதிவுகள்

13-05-2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழலின் நினைவுகள்




## திருமதி சௌந்தர நாயகி கிருஷ்ணபிள்ளை

அன்னைமடியில்
17-02-1942

ஆண்டவன்அடியில்
30-03-2013

## திதி வெண்பா

நந்தன வருடந்தன்னை நயந்துமே பங்குனித் திங்கள்

நின்ற சீர் பதிஏழாம் நாளில் வளர் பிறை நாள் கூட

உயர்ந்திடும் சதுர்த்தி திதிதனில் -நற்றவள்

சௌந்தர நாயகி நண்ணினாள் உத்தமண் வாழ்வை உதிர்த்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சமர்ப்பணம்





உயிர் தந்து உருவாகி

பொழுதெல்லாம் எமைக் காத்து

இளமையிலே இணை இழந்தும்

தந்தைக்குத் தந்தையாயட தாயாய்

தன்னுயிர் வருத்தி வருத்தி

எம் உயரவு நோக்கியோ............

நின் ஆளுமையல் வல்லமையில்

வாழ்வுயர்ந்து நாம் சிறக்க

மனதுருகி மகிழ்ந்தாலே

தினமும் நின்பாதம் எம் தலை பணியும்

தாயே/தாயே/தாயே

அந்ததியே நின் நாமம்

நினைந்து நினைந்து நினைந்து

வணங்கும் வணங்கும் வணங்கும்

**ஓம்சாந்தி ஓம்சாந்தி ஓம்சாந்தி**


குடும்பத்தவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

35ம் 46ம் ஆண்டு நினைவு அஞ்சலி



## அமரரின் துணைவர்


## அமரர் பெரியதம்பி கிருஷ்ணபிள்ளை

தோற்றம் 16-07-1932

மறைவு 22-03-1978


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் இதயத்திலிருந்து

அன்பின் ஊற்றாய் திரு அழகு நிலா குளர்முகத்துடன்
அறம் செய் அன்னையாய் மங்கையர் திலகமாய்
சிறிது பெரிது பாராமல் எவர்க்கும் இனியவராய்
சமய நெறி கண்டு வழிநடந்து எம்மிடை
வாழ்ந்து எமக்கெல்லாம் இனியவராகி சிறப்பினை நல்கி
எம் உணர்வோடு கலந்த சௌந்தரநாயகியே
பிள்ளைகள் பற்றுள்ள பாசமுள்ள மாதாவை
பேரர்கள் பட்சமும் பாசமும் கொண்ட பாட்டிதனை
மருமக்கள் அன்புக்குரிய மரியாதைக்குரிய மாமியை
உற்றார் உறவினர் நண்பர் தங்களின் ஓர் கணதியான
பாத்திரத்தை, சௌந்தர்யத்தை இழந்தே விட்டது
இறைவனுகினியவள் இளமையில் இறை பதம் என்ற
கூற்றிற்கு இலக்கணமாய் கட்டியம் கூறிய
காட்சி இனிய மாதரசியை நாம் இழந்து விட்டோம்
இன்று விண்ணவர் வரிசையில் மேலும் ஒருவராய்
இணைந்துள்ள எம் குலக் கொழுந்தே தாயே
உம் இறப் பிறப்பற்று பேரினப் பெருவாழ்விற்கு
திரிகரண சுத்தியுடன் நாளும் பிராத்திக்கின்றோம்
படைத்தவன் பாதமலர் வீற்றிருந்து நாளும்
எமை ஆசீர்வதிப்பீர்களாக

**ஓம்சாந்தி ஓம்சாந்தி ஓம்சாந்தி**

குடும்பத்தவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பஞ்ச புராணம்

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

## திருவாசகம்

போற்றியோ நமச்சிவாய புயங்கயே மயங்குகின்றேன்
போற்றியோ நமச்சிவாய புகல் இடம் பிறிது ஒன்றில்லை
போற்றியோ நமச்சிவாய புறம் எனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சிவாய சயசய போற்றி போற்றி.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவர் தன்னைக் கண்டு கண்(டு) உள்ளங்
குளிர என் கண்கள் குளிர்ந்தனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்.
பெற்றதார் பெறுவார் உலகில்?
ஊரும் உலகுங் கழற
உளறி உமைமண வாளனுக்காட்
பாரும்விசும்பும் அறியும்
பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டு நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க வென்றார்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத்தினி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீ ரடியா ரெல்லாம்

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோற்றம்

மந்தியென பூதமென
வால் சுருண்ட குக்கலென
மாய நிலை கொண்ட மதியே
வைரமணிப் பொன்னாகும்
வாசமனை யாள் உருவும்
வந்து மறை நின்ற நிதியே
வெந்தளிந்து நிறுபடும்
மேனியது சாகுமுன்னம்
வேண்டுவது நல்ல கதியே
மேல வரைச் சேருவதும்
நூலலனின் நட்புறவும்
விண்ணமரச் செய்யும் நிதியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தார்

பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லைப் பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடு போவதில்'லை இடை நடுவில்
குறிக்கு மிகச செல்வம் சிவன் தந்ததென்று கொடுக்கறியாது
இறக்கும் குலாமருக் கென் சொல்லுவேன் சசசியே கம்பனே

என் செயலால் ஆவது யாது ஒன்றும் இல்லை இனித் தெய்வமே
உன் செயலே என்று உணரப் பெற்றேன் இந்த ஊன் எடுத்த
பின் செய்த தீவினை யாது ஒனறுமில்லைப் பிறப்பதற்கு
முன் செய்த தீவினையோ இங்கனே வந்து மூண்டதுவே

ஐயந்தொடர்ந்து விழியுங் செருகி அறவிழிந்து
மெய்யும் பெய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன்யான்
செய்யும் திருவொற்றி யீருடையீர் திருநீறு மிட்டு
கையும் தொழப்பண்ணி ஐந்தெழுத்து ஓதவும் கற்பியுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்னாரிற் பூட்டிய சூத்தரப்
பாவைநன் னார் தப்பினால்
தன்னாலும் ஆடிச் சலத்திடுமோ'
அந்தத் தன்மையைப் போல்
உன்னால யானுந் திரிவதல்லால்
மற்று உனைப் பிரிந்தால்
என்னால் இங்கு ஆவதுண்டோ
இறைவா கச்சி ஏகம்பனே

நல்லார் இணக்கமும் நின் பூசை
நேசமும் ஞானமும்
அல்லாது வேறு நிலையுளதோ'
அகமும் பொருளும்
இல்லாளும் சுற்றமும் மைந்தரும்'
வாழ்வும் எழிலுடம்பு
எல்லாம் வெளிமயக்கே
இறைவா கச்சி ஏகம்பனே

கல்லாப் பிழையும் கருதா
பழையும் கசந்துருகி
நில்லாப் பிழையும் நினையாய்
பிழையும் நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப்பிழையும் துதியாப்
பிழையும் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய்
கச்சி ஏகம்பனே

முடிவு சார்ந்த மன்னரும் மற்றும்
உள்ளோரும் முடிவிலொரு
பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதுங்
கண்டு பின்னும் இந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லால்
பொன்னின் அம்பலவர்
அடிசார்ந்ர் நாமுய்ய வேண்டுமெனறே
அறிவார் இல்லையே

தெய்வச் சிதம்ப தேவா உன்
சித்தம் திரும்பி விட்டால்
பொய்வைத்த சொப்பனமாம் மன்னர்
வாழ்வும் புவியுமெங்கே
மெய்வைத்த செல்வமெங்கே மன்னர்
லீகர்தம் மேடை எங்கே
கை வைத்த நாடகசாலை எங்கே
இது கண்டியுக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயம் கொடர்ந்து வழியும்
செருகி அறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற
போதொன்ற வேண்டுவன் யான்
செய்யும் திருவொற்றி யூருடையீர்
திருநீறும் இட்டுக்
கையும் தொழப்பண்ணி ஐந்தெழுத்து
ஓதவும் கற்பியுமே

அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே
விழி அம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே
விம்மி விம்மிஇரு
கைத்தலை மேல்வைத்ததழும் மைந்தரும்
சுடு காடு மட்டே
பற்றித் தொடரும் இருவினைப்
புண்ணிய பாவமுமே

ஒன்றென் றிரு தெய்வம் உண்டென்றிரு
உயர் செல்வமெல்லாம்
அன்றென்றிரு பசித்தோர் முகம்பார்
நல்லறமும் நட்பும்
நன்றென் றிருநடு நீங்காமலே
நமக்கு இட்டபடி
என்றென் றிருமனமே உனக்கே
உப தேசமம் இதே

என்செயலாவது யாதொன்று
இல்லை இனித் தெய்வமே
உன் செயலே என்று உணர்ப் பெற்றேன்
இந்த ஊனெடுத்த
பின் செய்த தீவினை யாதொன்றும்
இல்லை விறப்பதற்கு
முன்செய்ததீ வினையோ இங்ஙனே
வந்து மூண்டத வே

இருப்பது பொய் போவது மெய்
என்றென்னி நெஞ்சே
ஒருத்தருக்கும் தீங்கிணையுன்
ணாதே – பருத்தி தொந்தி
நம்மதென்று நாமிருப்ப
நாய் நரிகள் பேய் கழுகுதம்
மதென்று தாமிருக்கத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்ம விழிப்பிற்காக...

உச்சி திறக்கட்டும் உயர்வு பிறக்கட்டும்



நான் உடல் அல்ல
நான் மனம் அல்ல
நான் உயிர் அல்ல
நான் பிரம்மம்

ஆகாயம் நிரந்தரமானது வெண்மேகம் தோன்றி மறைவது
கடல் நிரந்தரமானது ஆறுகள் தோன்றி மறைவது
ஆனந்தம் நிரந்தரமானது இன்பதுன்பங்கள் தோன்றி மறைவது
இந்த கணம் நிரந்தரமானது மனமும் எண்ணங்களும் தோன்றி மறைவது

வழிமுறை தேவையில்லாத தெரிநிலை தியானம்
மனதின் செயல்பாடுகளையும் புரிந்து கொள்ளல் தியானம்
ஒப்பிட எதுவும் கிடையாத மனதை கடந்து பறந்து தியானம்
ஆன்மாவில் உணர் நிலை எழுப்பல் தியானம்

நின்றால் வெளி அசைந்தால் வளி
சித்தம் சிறிதசைய சம்சாரம்
சித்தம் நிலைத்து நிற்க முத்தி சித்தமிது
சீவனும் அசைவற்று நின்றால் சிவம்

இருமை நிலை கடப்பது ராஜ நோக்கு
விழிப்புணர்வு ராஜ மார்க்கம்
வெறுமையை பற்றி நிற்பது ராஜ யோகம்
திருச்சிற்றம்பலம் ராஜரகசியம்

இலட்சியம் விட்டால் யேகம் போச்சு
குண்டலினி விட்டால் அஷ்டசித்திபோச்சு
மனம் விட்டால் ஞானம் போச்சு
வாசி விட்டால் தேகம் போச்சு

கண்கள் காணாத போது செவிகள் கேளாத போது
மனம் அறியாத போது ஆத்மா செயல்படுகிறது
உடலில் எல்லையில்லா ஆனந்தம் பொங்குகிறது
பேரின்ப பெருவாழ்வு மலர்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணப் பாடல்கள்

## ஞாயிற்றுக்கிழமை

### தேவாரம்

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

பண் - சீகாமரம் 2ம் திருமுறை

*பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ள நினைவு*
*ஆயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்டா வொன்றும்*
*வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்*
*தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே.*

### திருவாசகம்

மாணிக்கவாசக சுவாமிகள்

8ம் திருமுறை

*பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்*
*பரிந்துநீ பாவியே னுடைய*
*ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி*
*உலப்பிலா ஆனந்த மாய*
*தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த*
*செல்வமே சிவபெரு மானே*
*யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்*
*எங்கெழுந் தருளுவ தினயே.*

### திருவிசைப்பா

கருவூர்த்தேவர்

பண் : காந்தாரம் 9ம் திருமுறை

*நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே*
*ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை*
*கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்*
*செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சேந்தனார்

பண் பஞ்சமம் 9ம் திருமுறை

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்துவம்மின்
கொண்டும் கொடுத்துங் குடி குடி
ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள் அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள
பொரு ளென்றே பல்லாண்டு கூறுதுமே.

## திருப் புராணம்

சேக்கிழார் பெருமான்

12ம் திருமுறை

ஆதியாய் நடுவுமாகி அளவிலா வளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா வேக மாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

# திங்கட்கிழமை

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

பண் - கொல்லி 3-ம் திருமுறை

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலா
கண்ணின்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8ம் திருமுறை

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம
வெனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ்
சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற்
கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே
வெறுத்திடவே

## திருவிசைப்பா

பூந்துருத்தி நம்பிகாடநம்பி

பண் - சாளரபாணி

எம்பந்த வல்வினைநோய் தீர்ந்திட் டெமையாளும்
சம்பந்தன் காழியர்கோன் தன்னைமாட் கொண்டருளி
அம்புந்து கண்ணாளும் தானும் அணிதில்லைச்
செம்பொன் செய் அம்பலமே சேர்ந்திருக்கை ஆயிற்றே.

## திருப்பல்லாண்டு

சேந்தனார்

பண் - பஞ்சமம் 9ம் திருமுறை

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்ட ருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு விடங்கள்
விடைப்பாகன்
பல்லாண்டெனும் பதங் கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருப் புராணம்

சேக்கிழார் சுவாமிகள்

12ம் திருமுறை

தூயவெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச் செஞ்சொற்
மேய செவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே.

## செவ்வாய்க்கிழமை

### தேவாரம்

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு நாயனார்

பண் : திருவிருத்தம் 4ம் திருமுறை

ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் தோன்றினராய்
மூன்றா யுலகம் படைத்துகந்தான் மனத்துள்ளிருக்க
ஏன்றா னிமையவர்க் கன்பன் திருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையாயிருந்தனன் தன்னடி யோங்களுக்கே

### திருவாசகம்

மாணிக்கவாசக சுவாமிகள்

8ம் திருமுறை

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

பூந்துருத்தி நம்பி காடநம்பி

பண் : சாளரபாணி 9ம் திருமுறை

களையா உடலோடு சேரமான ஆரூரன்
விளையா மதமாறா வெள்ளானை மேற்கொள்ள
முளையா மதிசூடி மூவா யிரவரொடும்
அளையா விளையாடும் அம்பலம்நின் ஆடரங்கே

## திருப்பல்லாண்டு

சேந்தனார்

பண் : பஞ்சமம் 9ம் திருமுறை

சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெறாத அறிவு பெற்
றேன் பெற்ற தார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற
உழறி உமைமண வாளனுக்காள்
பாரும் விசும்பும் அறியும்
பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே

## திருப் புராணம்

சேக்கிழார் பெருமான்

12 ம் திருமுறை

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத்து விகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமானந்த
எல்லையில் தனிபெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன்கிழமை

## தேவாரம்

திருநாவுக்கரசு நாயனார்

பண் : திருத்தாண்டகம் 6ம் திருமுறை

திருநாமம் அஞ்சழுத்துஞ் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசாராகில்
ஒரு காலும் திருக்கோயில் குழா ராகில்
உன்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெட வெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெரு நோய்கள் மிகநலியப் பெயர்ந்தும் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே.

## திருவாசகம்

மாணிக்கவாசக சுவாமிகள்

8ம் திருமுறை

வேண்டத்தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உந்தன் விருப்பன்றே

## திருவிசைப்பா

சேந்தனார்

பண் :பஞ்சமம் 9ம் திருமுறை

ஏகநா யகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழிமிழலை
விண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சேந்தனார்

பண் : பஞ்சமம் 9ம் திருமுறை

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடற் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்குகே பல்லாண்டு கூறுதுமே

## திருப் புராணம்

சேக்கிழார் பெருமான்

12ம் திருமுறை

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞான
தவமுதல்வர் சம்பந்தர் தாம்உணர்ந்தார் அந்நிலையில்

# வியாழக்கிழமை

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்திநாயனார்

பண் : கொல்லி 7ம் திருமுறை

ம்மையே புகழ்ந் திச்சைபேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பாய்மையாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
ம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர்கெடலுமாம்
ம்மையே சிவ லோகமாள்வதற்(கு)
யாது மையுற வில்லையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

மாணிக்கவாசக சுவாமிகள்

8ம் திருமுறை

அன்றே எந்தன் ஆவியும்
உடலும் உடைமை யெல்லாமும்
குன்றே அனையாய் என்னையாட்
கொண்டபோதே கொண்டிலையே
இன்றோ ரிடையூறு றெனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செவ்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமோ

## திருவிசைப்பா

கருவூர்த்தேவர்

பண் : பஞ்சமம்

9ம் திருமுறை

தந்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூ றாயிரங் கூறிட்(டு)
அத்திலங் கொருகூ(று) உன்கண்வைத் தவருக்(கு)
அமருல களிக்குநின் பெருமை
பித்தனென் றொருகால் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிவைத்த கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

## திருப்பல்லாண்டு

சேந்தனார்

பண் : பஞ்சமம்

9ம் திருமுறை

தாதையைத் தாளர வீசிய
சண்டிக்கிவ் அண்டத்தொடு முடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற்
கோயிலும் போனகமும் அருளிச்
சோதிமணி முடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசு வைத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருப் புராணம்

சேக்கிழார் சுவாமிகள்

ஞானத்தின் திருவுருவை நான்மறையின்
தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர்
மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார்
சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண் களிப்பக்
கண்டார்கள்.

## வெள்ளிக்கிழமை

### தேவாரம்

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்திநாயனார்

பண் : தக்கேசி 7ம் திருமுறை

பொன்னும் மெய்ப்பொரு ளுந்தரு வானைப்
போக மும்திரு வும்புணர்வுப் பானைப்
பின்னை யென்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மையை னென்றறி யொண்ணா
எம்மா னையெளி வந்தபிரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
யாரூ ரானை மறக்கலு மாமே.

### திருவாசகம்

மாணிக்கவாசக சுவாமிகள்

8ம் திருமுறை

மெய்தா னரும்பி விதிர்விதிர்த்
துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னுங்
கைதான் நெகிழ விடேனுடை
யாயென்னைக் கண்டுகொள்ளே.

## திருவிசைப்பா

திருவாலியமுதனார்

பண் : இந்தளம் 9ம் திருமுறை

அன்ன நடையார் அமுத
மொழியார் அவர்கள் பயில்தில்லைத்
தென்னவன் தமிழும் இசையும்
கலந்த சிற்றம் பலந்தன்னுள்
பொன்னும் மணியும் நிரந்த
தலத்துப் புலித்தோல் பியற்கிட்டு
மின்னின் இடையாள் உமையாள்
காண விகிர்தன் ஆடுமே.

## திருப்பல்லாண்டு

சேந்தனார்

பண்: பஞ்சமம் 9ம் திருமுறை

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று விம்மி
மிகு திருவாரூரின்
மழவிடையார்க்கு வழி வழி ஆளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடியாரொடும் கூடி எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப் புராணம்

07. சேக்கிழார் சுவாமிகள்

மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணி னால் அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனின் உலகர்முன் வருகென உரைப்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிக்கிழமை

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு நாயனார்

பண் : திருவிருத்தம் 4ம் திருமுறை

கருவுற்ற நாள்முத லாகஉன் பாதமே காண்பதற்கு
உருகிற்றென்னுள்ளமும் நானும் கிடந்தலந் தெய்த்
தொழிந்தேன்
திருவொற்றி யூரா திருவாலவாயா திருவாரூரா
ஒருபற் றிலாமையும் கண்டிரங் காய்ச்சி யேகம்பனே

## திருவாசகம்

மாணிக்கவாசக சுவாமிகள்

8ம் திருமுறை

இன்னெறன் கருளி யிருள்கடிந் துள்ளத்
தொழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை யறியகிற் பாரே

## திருவிசைப்பா

கண்டராதித்தர்

பண் - பஞ்சமம் 9ம் திருமுறை

முத்தீயாளர் நான்மறையர் மூவா யிரவர் நின்னோடு
ஒத்தே வாழும் தன்மை யாளர் ஓதிய நான்மறையைத்
தெத்தேயென்றுவண்டுபாடும் தென்தில்லை அம்பலத்துள்
அத்தாவுன்றன் ஆடல்காண அணைவதும் என்றுகொலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சேந்தனார்

பண் : பஞ்சமம் 9ம் திருமுறை

நிட்டை யிலாவுடல் நீத்தென்னை ஆண்ட
நிகரில்லா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச் சீராட்டுத்
திறங்களு மேசிந்தித்(து)
அட்ட மூர்த்திக்கென் அகம்நெகஊறும்
அமிர்தினுக் காலநிழல்
பட்டனுக் கென்னைத்தான் பாற்படுத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## பெரிய புராணம்

சேக்கிழார் சுவாமிகள்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின்
வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டே
லுன்னை யென்றும்
மறவாமை வேண்டு மின்னும் வேண்டும்நான்
மகிழ்ந்து பாடி
அறவாநீ யாடும் போதுன் னடியின்கீ
ழிருக்க வென்றார்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவராய சுவாமிகள் அருளிய

## கந்த சஷ்டி கவசம்



### காப்பு

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம் போம்நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித் தோங்கும்
நிட்டையும் கைகூடும், நிமலருள் கந்தர்
சஷ்டிக் கவசந்தனை.

### நேரிசை வெண்பா

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி குறி நெஞ்சே.

சஷ்டியை நோக்கச் சரவணபவனார்
சிஷ்டருக் குதவுந் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சலங்கை
கீதம் பாட கிண்கிணியாட
மையநடனஞ் செய்யும் மயில்வா கனார்
கையில் வேலாலெனைக் காக்க வென்று
வந்து வரவர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருகவருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகன் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீறிடும் வேலவன் நித்தமும் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவணபவனார் சடுதியில் வருக
ரஹணபவச ரரரர ரரர
ரிஹணபவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர கணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங்குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங்கிலியும் அடைவுடன் செளவும்
உய்யொளி செளவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் செளவும் கிளரொளி யையும்
நிலை பெற்றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தணியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறுமுகமும் அணிமுடியாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமுந் தரித்து
நண்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழ ந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செககண செககண செககண செகன
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
றுன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனை பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகளி ரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா ணாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும் பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்படு மண்ணரும்
கனகபூசை கொள் காளியோடனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக்காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடன் பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியபாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதா ளெனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு
புரண்டிவாய்விட்டலறி மதிகெட் டோட
படியினன் முட்டப் பாசக்கயிற்றால்
கட்டுடனங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகை சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடு வேலை வெருண்ட துவோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்தோடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடுவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினி லிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைஷயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்து றவாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவணபவனே சையொளி பவனே
திரிபுரபவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமராபதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகாசலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பாலகுமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையெ ன்றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேசமுடனொரு நினைவது வாக்கி
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பதாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்கு அருளுவர்
மாற்றெல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதனெவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர் கைவேலாங் கவசத் தடியை
விழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப் பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயிலட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவணபவ ஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
நமச்சிவாய



சிவபுராணம்ய

தொல்லை இரும்பிறவிச் சூழுந்தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமனிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க
வேகங் கெடுத்த ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன் அடி போற்றி சிவன் சேவடி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்
கண்ணுதலான் தன் கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்தது மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழும் ஆறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரர் ஆகிய முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாக வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம் விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானமிலாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே.
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறை யோனே
கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்கு
தாயிற் சிறந்த தயாபான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா அமுதே சிவபுரனே
பாசம் ஆம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓரார்தார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தில் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
உற்றான உண்ணார் அமுதே உடையானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினை பிறவி சாரமே
கள்ளப் புலக்குரம்பை கட்டளிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லத் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் திருமதி கிருஷ்ணபிள்ளை. செளந்தரநாயகி

## புங்குடுதீவு – 7ம் மடத்துவெளி

## வாழ்க்கைப் பதிவுகள்

| | |
|---|---|
| அமரரின் பெற்றோர் - | அமரர்கள் சொக்கலிங்கம் ஆசிரியர் திருமதி. சொ. நாகம்மா தம்பதியினர |
| அம்மையார் புவிதோற்றம் - | 17.02.1942 |
| கற்ற கல்விக் கூடங்கள்- | ஆரம்பக் கல்வி புங்குடுதீவு கணேசவித்தியாசாலை தொடர்ந்து பண்டத்தரிப்பு மத்திய கல்லூரி |
| திருமணம் - | 1960 – 08- 29ல் புங்குடுதீவில் |
| துணைவர்- | புங்குடுதீவு -3 பெருங்காடு |

அமரர்கள் திரு பெரிய தம்பி – தங்கம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் வர்த்தகரும் ஸ்ரீ முருகன் கிறைண்டிங்மில் உரிமையாளருமாகிய அமரர்திரு கிருஸ்ணபிள்ளை

| | |
|---|---|
| பிள்ளைகள் | அறுவர் முறையே<br>செளந்தர்ராஜன் (சுவிஸ்)<br>சசிமாலா(சுவிஸ்)<br>பிரபாகரன் (சுவிஸ்)<br>ஸ்ரீகரன் (சுவிஸ்)<br>உதயரமணி (சுவிஸ்)<br>விஜயகரன் (பிரானஸ்) |
| துணைவர் மறைவு – | 1978. 03. 22ல் அமரரின் துணைவர் திடீர் மரணமானார்.<br>தோற்றம்1932—7 16மறைவு 1978 -3 22 கணவரின் மறைவுக்குப் பின் கணவரின் வர்த்தக ஸ்தாபனமான |

கிளிநொச்சி ஸ்ரீ முருகன்
கிறைண்டிங்மில்லை
பொறுப்பேற்று நடாத்தலானார்.

பிள்ளைகள் வழிவந்த மருமக்கள்- தில்லைச் சொரூபி (சுவிஸ்)
விக்கினேஸ்வரன் (சுவிஸ்)
ரேவதி (தேவகி) (சுவிஸ்)
சுபா(மதாகினி (சுலிஸ்)
ராசன் (அம்பாள்) (சுவிஸ்)
அனோஜா (பிரான்ஸ்)

பேரப்பிள்ளைகள் - கீர்த்தனா, அனிதா, அகர்ஷன், பிரணவி, கார்த்திகன், கஸ்தூரி, கிருத்திகன், கிருஷ்ணவி, ஜனனி, ஆரபி, மிருஷா (சுவிஸ்) கார்மிதன், சௌமியா (பிரான்ஸ்)

வசிப்பிடங்கள் - புங்குடுதீவு 7 மடத்து வெளியில் தன்பூர்வீக இல்லத்தில் 1991 இன் பின்னர் கிளிநொச்சி வட்டக்கச்சி 391 ஆறுமுகம் வீதியில் பின்னர் கொட்டாஞ்சேனை கொழும்பு -13 இல்

அமரரின் உள்ளம் உணர்ந்த நிகழ்வுகள் -துணைவரின் மறைவிற்குப் பின் குடும்பப் பாரத்தை ஏற்று தனித்து நின்று ஆளுமையுடன் வல்லமையுடன் தன்பிள்ளைகளை நன்நிலைக்கு கொண்டு வந்து அவர்களுக்கு ஏற்ற துணையை இணைத்து ஆனந்தமடைந்தமை.

தன் இல்லத்தில் அருகில் உள்ள மடத்துவெளி முருகனை தன் குலதெய்வமாக ஏற்று வழிபட்டு வந்தமை.
மேற்படி ஆலயத்தின் ஆறாம் திருவிழா உபயகாரராகவும் கந்தசஷ்டி உபயங்களுக்கு பணம் பொருள் தந்து உதவியமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி ஆலயத்தின் பெருளாளராக இருந்து திறம்படபணியாற்றியமை. ஆலயவளர்ச்சியில் பங்கெடுத்து வந்தமை/ தனது மகன்பிரபாகரனுடன் தென்னிந்தியா சென்று ஐயப்பன் திருத்தலம் உட்பட்ட பல்வேறு திருத்தலங்களுக்குச் சென்று தரிசித்து மனநிறைவு கொண்டமை

சுவிஸ், பிரான்ஸ், பெல்ஜியம் என பல்வேறு நாடுகளுக்குச் சென்று தன் உறவுகளைக் கண்டு மகிழ்ந்தமை.

இரக்கசிந்தனையும், தர்மசிந்தனையும் கொண்ட அமரர் பல ஆலயங்களுக்கு பொருள் பண உதவிசெய்வதில் மனநிறைவு கொண்டார் தண் கிராமத்து மக்களை பார்ப்பதில் பேசுவதில் மகிழ்வு கொண்ட அமரர் அவர்களுக்கு பொருள்பண உதலி செய் வதில் மன நிறைவு கொண்டார்

அமரரின் முயற்சியின் சின்னமாக - கிளிநொச்சி பிரதானவீதி அமரருக்கு உரித்தான காணியில் மிகப்பெரிய கடைக் கட்டிடம் கம்பீரமாக அமரரின் முயற்சியின் சின்னமாக எழுந்துநிற்கின்றது.

அமரரின் இறுதி நிகழ்வுகள்- 28.03.2013 இல் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடியில் அமைந்துள்ளதன் உறவுமுறை சகோரதரியான மகேஸ்வரியின் இல்லத்திற்கு வழக்கம் போல் வருகை பின் அன்றே புங்குடுதீவு சென்று பெருங்காடு கிராஞ்சியம்பதி முருகனுக்கு எண்ணைசாத்தல் பின் சொந்த இடம் சென்று மடத்துவெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகனை தரிசித்தல், பின் உறவினர் வீட்டில் தங்கி 29.03.2013ல் பெருங்பாடு கிராஞ்சியம்பதி முருகனின் குடமுழுக்கு நிகழ்வில் கலந்து பேரருள் பெற்றுதன் இன உறவுகளுடன் பேசி மகிழதல் பின் யாழ் வந்து பெருமாளை தரிசித்து விரயகர் ஆலயத்தில் சங்கட சதுர்த்திப் பூசையில் கலந்து கொண்டமை பின் பெருமாள் கோவிலடி இல்லத்தில் தங்கல் அன்றிரவு சிறிது உடல் நலக்குறைவு.

இறப்பு — 30.03.2013 காலை அமரரின் உடலில் சோர்வு ஆயினும்யாவருடனும் பேசிக்கொண்டிருந்தமை சிறிது நேரத்தின் பின் ஆழ்ந்த உறக்கம். பகல் 1.15 மணியளவில் திடீரென உடல்நலக்குறைவு தலையை சுற்றுகிறது என வீட்டில் உள்ளவர்களிடம் கூறினார். ஆயினும் நோய்நொடி வந்து பாயில் கிடந்து உழன்று கிடக்காமல் மற்றவர்க்கு கடமைப்படாமல் சாவு தன்னை அணைத்திட வேண்டும் அன்னாரின்நெடுநாளைய பிரார்த்தனை நனவாக தன் நாமம் கெட்டு தன்னை மறந்து பிள்ளைகள் பற்றான உறவுகளும் கண்கலங்க கண் விழித்து கண்டாள் மெய்ப்பொருதனை முருகனின் பாதமதை பற்றிக் கொண்டாள்.

அந்தியேட்டி கிரியைகள் - 15.04.2013 காலை கீரிமலையில் நடைபெற்றது.

வீட்டுக் கிரியைகள் 391 ஆறுமுகம் வீதி வட்டக்கச்சியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் 17.04.2013 ல் நடைபெற்றது.

ஆத்மசாந்திப் பிரார்த்தனை- 391 ஆறுமுகம் வீதி வட்டக்கச்சியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் 13.05.2013ல் நடைபெற்றது.

**ஓம்சாந்தி ஓம்சாந்தி ஓம்சாந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடத்துவெளி ஸ்ரீ பாலசுப்பிரமணியஆலய வரலாறு

புங்குடுதீவு மடத்துவெளி ஸ்ரீ பாலசுப்பிரமணியர் கோவில் ஆரம்ப காலத்தில் நாச்சிமார் கோவில் என்றே அழைக்கப்பட்டது. புங்குடுதீவிள் நுழைந்தாததும் முதலில் வரும் கிராமம் மடத்துவெளி இக்கிராமத்தினுள் நுழைந்ததும் பிரதான விதியின் வலதுபுறம் நெடுகி லும் பச்சைப் பசேலென்ற நெல் வயல்களின் நடுவே கிழக்கு நோக்கி சிங்காரமாய் கோலோச்சும் முருகப் பெருமானின் அழகுமிகு திருத்தலம் காட்சியளிக்கும். கம்பீரமாய் எழுந்து நிற்கும் சிற்பத் தேர் முட்டியின் பனங்கூடலின் பின்னணியில் அருள் புரியும் ஸ்ரீ பாலசுப்பிரமணியர் எழுந்தருளி இருக்கிறார். இளந்தாரி நாச்சிமார் கோவில் என்ற தொன்மைப் பெயரைக் கொண்ட இவ்வாலயம் சுமார் நானூறு ஆண்டுகள் பழமைவாய்ந்ததாகும். நானூறு ஆண்டுகளுக்கு முன்னே வள்ளி நாச்சியார் அயல் கிராமத்தில் இருந்து மடத்துவெளி கிராமத்தைச் சேர்ந்தவரை திருமணம் செய்தார். மணமகளான வள்ளிநாச்சியார் மணமகன் மூண்றுநாள் தங்கி வழனமப்பழ இருந்தார் மூண்றாம் நாள் கானல நாச்சியார் உள்ளமுன்புறம் வயலில் இறங்கிய போது வயலின் உரிமையாளர் நீர் புகுந்த வீடு எம்மோடு சேர்ந்து வாழும் தகுதி அற்றது. என்று ஏளனம் செய்தார்.

இதனைக் கேட்டு கவலையுற்ற நாச்சியார்ஒரு அதே இடத்திலேயே தனது தாலியை கழற்றி அந்த வயல் வரம்பில் கல்லின் மீது வைத்து சிரட்டையால் மூடி விட்டு தனது பிறந்த ஊருக்குச் சென்று விட்டார் இதனைகண்ட இவர்ரது கணவர் அண்று முதல் அந்தக்கல்லைவைத்து ஒரு கோவிலை உருவாக்கி வழிபட்டு தானும் அமமாறுமணம் செய்த வாழ்ந்து வந்தார் வள்ளிநாசசியார் தன் பிறந்த ஊருக்கு சென்று அங்கே உள்ள இழுப்பண்ணை என்னும் இடத்தில் ஒரு ஆலயத்தை வைத்து வழிபட்டார். அந்த ஆலயம் வல்லன் இழுப்பண்ணை நாச்சிமார் கோவில் என இப்போது அழைக்கப்படுகின்றது. மடத்துவெளி நாச்சிமார் கோவிலின் தெற்கில் ஒரு அரசமரம் நின்றது. அங்கே ஒரு பாம்பு ஒன்று வாழ்ந்து வந்ததாகவும் கூறப்படுகின்றது. இந்த அரச மரத்தின் வேரானது நீளமாக பக்கத்தில் இருந்த சுண்ணாம்பினால் ஆன கோயில் சுவரில் பாம்பு வாழ்ந்த ஓட்டையினருகே ஒரு மனித கைகால் உருவில் வேர் படர்ந்திருந்ததாகவும் மக்கள் இந்த அதிசயத்தை பார்க்க மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடத்தொடங்கியதும் அக்கிராமத்தைச் சேர்ந்த பூரணம் என்ற வயோதிப மாது இந்த வேரை முறித்துக்கொண்டுபோய் தன் வீட்டுக் கூரைமேல் எறிந்து விட அவ்வீடு அன்றிரவு சாம்பலானதாக வரலாறு கூறுகின்றது.

இவ்வாலயம் 1960 ஆண்டு காலத்தில் புனரமைக்கப்பட்டு அதன் உரிமையாளராக திரு. வேலுப்பிள்ளை சபாபதி இருந்து வந்தார். இக்காலத்தில் இவ்வாலயத்திலிருந்த பொருட்கள் திருட்டுப் போய் விட்டது. இதனால் கோபம் கொண்ட சபாபதியார் எனக்கு திருடனைக் காட்ட வேண்டும். அதுவரை நான் ஆலயத்தை திறக்கவும் மாட்டேன்.விளக்கும் வைக்கவும் மாட்டன் என்று ஆலயத்தைப் பூட்டிச் சென்று விட்டார். அதிகாலையில் பார்த்த போது ஆலய முன்றலில திருடடுப் போன பொருட்கள் அத்தனையும் வைக்கப்பட்டு கற்பூரம் கொழுத்தி இருக்கக் காணப்பட்டது.அதன் பின்னர் ஆலயம் திறக்கப்பட்டு விளக்கு வைக்கப்பட்டது. இவரது வறுமை காரணமாக தொடர்ந்து இவ்வாலயத்தை வர்த்தகர் வி. அருணாசலம்பொறுப்பேற்ற பின்னர் முற்று முழுதாக ஆலயம் புனரமைக்கப்பட்டது. மூலத்தானத்தின் உள்ளே வேலாயுதமும் வடமேற்கு மூலையின் நாச்சியாரின் விக்கிரகமும் பிரதிஸ்டை செய்யப்பட்டு ஆலயத்தின் பெயரும் பாலசுப்பிரமணியர் கோவில் என்றும் மாற்றப்பட்டது. சின்ன நல்லூர்என்று செல்லமாக அழைக்கப்படும் இந்த ஆலயத்தில் நல்லூர் ஆலயம் போன்றே சரியான நேரத்தில் பூஜை நடைபெற்று வருகிறது. அத்தோடு இவ்வாலயத்தின் திருவிழாக்கள் மிகக் கட்டுப்பாட்டுடன் முறையான சைவ விதிமுறைக்கு

ஏற்ப நடைபெறுவது வழக்கம். திருவிழா தினமும் பகலும் இரவும் பன்னிரண்டு மணிக்கே முற்றாக முடிவுறும் அத்தோடு சமய கொள்கைகளுக்கு உட்படாத சினிமாபாடல்களை கொண்ட நிகழ்ச்சிகள் கேளிக்கை வேவேடிக்கை நிகழ்ச்சிகள் தடைசெய்யப்பட்ட நிலையிலேயே திருவிழா நடைபெறும். திரு.வி. அருணாசலத்தை தொடர்ந்து வர்த்தகர் வி. இராமநாதன் பொறுப்பேற்றார். இவரது முயற்சியில் இவ்வாலயத்தில் எழுபதுகளின் ஆரம்பத்தில் புங்குடுதீவிலேயே முதன்முதலாக முற்றிலும் சித்திர வேலைப்பாட்டில் முடி வரை அமையப்பெற்ற நல்லூர் ஆலயத் தேரை ஒத்ததான சித்திரத் தேர் வீதியுலா வந்த பெருமை பெற்றது. பிரபல வர்த்தகர் அ. மாணிக்கம் மனைவியின் நினைவாக ஒரு அன்னதான மண்டபத்தை அமைத்துக் கொடுத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிழாக் காலத்தில் இங்கே அன்னதானம் நடைபெறும். இந்தப் பணியை சிறப்பாக மட்டத்துவெளி சனசமூக நிலையத்தினர் தொடர்ந்து செய்து வந்தனர். 1987 முதல் இந்த அன்னதான பணியை அமுதகலசம் என்னும் நாமமிட்டு தமது சொந்த பொறுப்பில் நடாத்தி சிறப்பித்தனர். வர்த்தகர் பா. பாலசுந்தரம் தாகசாந்தி நிலையத்தை திருவிழாக் காலங்களில் நடாத்தி வருகிறார். இவ்வாலயத்தின் கொடியேற்றம், தேர்த்திருவிழா, சித்திரத்தேரோட்டம், தீர்த்தம், பூங்'காவனம் உட்பட சிறப்பாக வெகுவிமரிசையாக நடைபெறும். மேலும் சூரன்போர் வாழை வெட்டு கந்தசஷ்டி,திருவெம்பாவை போன்ற விழாக்களும் மிக சிறப்பானதாக இருக்கும். திருவெம்பாவை அதிகாலை 4 மணிக்கு ஆரம்ப மணியோசையுடன் தொடக்கி திருப்பள்ளி எழுச்சி பாடி துயில் எழுப்புதல் மங்கள வாத்தியக்கச்சேரி கூட்டு வழிபாடு என வரிசையாக நடைபெற்று காலை ஆறரைக்கு முடிவுறுதல் வரலாற்றுப் பதிவாகும். இதே காலத்தில் கூட்டு வழிபாட்டு மன்றத்தினர் அதிகாலையிலேயே சங்கு சேமக்கலம் சகிதம் கிராமந்தோறும் பற்றி எழுப்பும் தொன்மை வாய்ந்த நிகழ்வை மேற்கொள்வர். இவ்வாலயத்தின் கூட்டு வழிபாட்டு மன்றம் தீவுப் பகுதியில் மிக சிறப்பு பெற்றது. இந்த பணியை பொறுப்பாக நான்கு தசாப்தமாக நடத்தி வந்த பெருமை உள்ளூர் வர்த்தகரான கந்தையா அம்பலவாணரையே சாரும். மிகவும் தரமான சீரான கூட்டு வழிபாட்டு முறையை திறம்பட நடத்தி வந்தனர். 1991 காலப் பகுதியில் இராணுவம் உட்புக பெரும்பாலான மக்கள் இடம்பெயர ஆலயம் பொழிவிழந்து போனது. பின்னர் சோ. சிவலிங்கம் தலைவராகவும் கு. கிருபானந்தன் செயலாளராகவும் கி. சவுந்தரநாயகி பொருளாளராகவும் கொண்ட புதிய பரிபாலன சபையும் உருவாகியது. பின் வந்த காலங்களில் தம்பிப்பிள்ளை என்பவர் தானே தனித்து ஆலயத்தை துப்பரவு செய்து தினமும் விளக்கேற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. 2002 முதல் மீண்டும் நித்தியா

நைவேத்திய கிரியைகள் நடைபெற்று வருகின்றன. அண்மைக் காலமாக இந்த ஆலயத்தினை மீள்நிர்மாணம் செய்து ராஜகோபுரத்தினை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் வேளையில் வி. இராமநாதன் அவர்கள் முருகனடி சேர்ந்தமை துரதிஷ்டமானது. பொதுச்சேவையில் வரலாறுகளை பதிக்கும் மடத்துவெளி இளைஞர் மீண்டும் 2012 புதிய நிர்வாகத்தில் பங்குனி மாதம் நடைபெற்ற புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகத்தில் புதிய தலைவராக அ. சண்முகநாதனும், செயலாளர் க. சதீஸ்வரன், பொருளாளர் ந. பசிதரன்,தெரிவு செய்யப்பட்டமை முருகன் ஆலயத்தின் மறுமலர்ச்சிக் காலமெனலாம். உலகெங்கும் பரவிவாழும் மடத்துவெளி இளம் தலைமுறையினரால் இனிவரும்காலங்களில் இவ்வாலயம் மேலும் சிறப்புப் பெறும் என நம்புவோமாக.

## அன்னை வழிபடும் தெய்வம்

அமுது ஊறும் இனிய சொல் அம்மா அதுவே உயிர்முதற்சொல்
உயிர்கட்குத் தாயாக உள்ளவள் அம்மா
குழந்தை முதலில் அறிவதும், அழைப்பதும் அன்னைதான்
பத்துத்திங்கள் பொறுமை கொண்டு சுமந்து பெற்றெடுத்து
பாலூட்டி சீராட்டி இரவும் பகலும் அயராது கண் விழித்து
கண்இமை காப்பது போல் காப்பவள் வளர்ப்பவள் அன்னை

வளரும் குழந்தையை பாதுகாத்து பூரித்து நிற்கும் தாய்
தந்தை இவர் தான் எனக் காட்டி நிற்பவள் அன்னை
சான்றோன் எனக் கேட்டதும் ஈன்ற பொழுதிற்பெரிது
வக்கின்றவள் தாயன்புக்கு ஈடு இணை ஏது. எனும்படி அன்பை
சொரிகின்றாள் உயிர்கள் காட்டும் அன்பும் பரிவும்
தாயிடம் பூத்த பண்புகள் தாய்மையில் ஊற்றெடும் .இயல்புகள்.

தாயாய் முலையைத் தருவானே
தாரதொழிந்தால் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ
நம்பியினித்தான் நல்குதியே
தாயே என்றுன் தாள் அடைந்தேன்
தாயேன் அடிமை உடனாக
ஆண்டாய் நான்தான் வேண்டாவே

மாணிக்கவாசகர் சுவாமிகளும் அன்னையும்'
பிதாவும் முன்னெறி தெய்வம்
தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை என்றுஔவையாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றதாயும் பிறந்த பொன்னாடுமபெற்றதாயும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே –சுப்பிரமணியபாரதியாரரும் இவ்வாறாக பல்வேறு அறிஞர்கள் சமயப் பெரியோர்கள், அன்று தொட்டு இன்றுவரை தாய்மையே போற்றி வருகின்றனர். தாய்மையைப் போற்றும் மரபும் பண்பும் தாயை தெய்வ வடிவில் காணும் இயல்பும் தாயை வழிபடும் முறைமைகள் இன்றும் நடைமுறையில் இருந்து வருகின்றது.

முற்றும் துறந்த முனிவர்கள் கூடத் தாயைத் துறந்தனர் அல்லர்.

கோடி கோடியாய் சேர்தது வைத்த செல்வங்களைத் தெருவில் இறைத்து மனைவியையும் சுற்றத்தவரையும் உதறி எறிந்தவர். சுகபோக வாழ்வை நீந்த்வர் பட்டனத்தார் காதற்ற ஊசியும் வராது காண் கடைவழிக்கே எனப் பகிரிந்து காடோ செடியோ கடற் புறமோ கனமே மிகுந்த நாடோ நகர் கடற்புறமோ வீடோ புறத்திண்ணையோ வயல்வெளியோ என்று அலைந்தவர் கூத்தப்பிரான் கழலினைகளை நினைத்து உருகியவர் பட்டனத்தார்.

நினைவு கனவு உறக்கம் என்ற உணர்வு நிலைகளைக் கடந்தவர் பொறி புலன்களைக் கடந்தவர். நாம ரூப வேறுபாடுகனை மறந்தவர். மானம் அவமானம் இன்பம், துன்பம் என்பனவற்றை வேறாகக்கொண்டவர் பற்றற்ற நிலையை எய்தியவர் பட்டனத்தார்.

அத்தகைய அருளான் பட்டனத்தார் தன்னைப் பெற்ற அன்னை இறந்த பொழுது கதறி அழுதார்.

முன்னை இட்ட தீ முப்புரத்திலே
பின்னை இட்ட தீ தென்னிலங்கையிலே
அன்னை இட்ட தீ அடிவயிற்றிலே
யானும் இட்ட தீ மூள்கமூள்கவே

எனத் தாய்க்கு தீமூட்டினார் அன்னை ஈந்த உடல்தான் மெஞ்ஞானம் பெற ஊடகமாய் அமைந்தது. என உணர்ந்த பட்டினத்தடிகள் அன்னையைப் போற்றினார். பட்டனத்தடிகள் வாழ்வும் வரலாறும் பற்றற்ற நிலையிலும் அன்னையை வழிபடும் இயல்புக்கு இதுவோர் எடுத்துக்காட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேரளம் தந்த முனிவர் ஆதிசங்கரர் காலடி அவர் பிறந்த ஊர். தன் தந்தையை நான்காவது வயதில் இழந்தார். தாயின் அரவணைப்பில் வளர்ந்த அவர் தனது பன்னிரண்டாவது வயதில் தாயின் அனுமதி பெற்றுத் துறவியானார்.

சிறுவயதிலே வேதசாஸ்திரங்களை கற்றுத்தெளிந்த ஆதிசங்கரர் தாயின் அனுமதி கிடைத்தவுடன் தாயைப் பார்த்து அனைத்து உறவுகளையும் நான் விட்டேன் துறவியாகின்றேன். எனினும் உன் கடைசிக் காலத்தில் உன்னிடம் வந்து சேருவேன். நானே உன் அந்திமக் கடன்களைச் செய்வேன் உனக்கு பிள்ளை நான் எனக் கூறினார்.

ஆதிசங்கரர் இந்தியக் துணைக்கண்டம் எங்கும் சென்றார். இந்து சமய விழிப்புணர்ச்சிக்கு வித்திட்டார். விரித்துரைத்த நூல்களை எழுதினார். மடங்கள் நிறுவினார். ஓயாது உழைத்தார்.

துங்கபத்திரா நதிக்கரையில் சிருங்கேரியில் சாரதாபிடம் நிறுவித் தங்கியிருந்த காலத்தில் அவருக்குத் தாயார் பற்றிய செய்தி வந்தது. அன்னையின் அந்திமநாட்கள் நெருங்கியதை அறிந்த அவர். சொந்த ஊரான காலடி திரும்பினார். அன்னையைக் கண்டார். மகனைக் கண்ட அன்னையும் மகிழ்ந்தார். ஆன்மீக ஆற்றல் பெற்ற ஆதிசங்கரர் திருமாலை நோக்கி பாமாலை பாடினார். தன் அன்னையின் ஆன்ம முக்தியைக் கண்டார்.

முன்பு தன் தாய்க்கு வாக்களித்த படி அன்னையின் உடலுக்கு தீ மூட்ட முயன்றார். துறவியர் செயல் இதுவல்ல என ஊரவர் உறவினர் தடுத்தனர். பழித்தனர். எனினும் சங்கரர் ஒப்பவில்லை. அன்னையை தெய்வம் என வழிபட்டார். தானே உடலைச் சுமந்து சென்றார். சிதையில் இட்டார்.தீ மூட்டி இறுதிக் கடன்களை முடித்தார். தன் பணிகளைத் தொடர்ந்தார்.

அன்னை அன்னை அதுவோர் அறுக்க முடியாத உறவு மறுக்காத உறவு, அவிழ்க்க முடியாத பாசப்பிணைப்பு, உலகில் எந்த மூலையில் இருந்தாலும் அன்னை என்ற உறவின் புனிதநீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நதியாக நம் உள்ளத்தில் ஊற்றெடுத்துக் கொண்டே இருக்கும், இரத்தத்தோடு கலந்திருக்கும்.

பற்றுஅற்று நின்ற நிலையிலும் சரி, உலகின் எந்த மூலையில் இருப்பினும் அன்னைக்கு நம் கடன்களை ஆற்றுக நமக்கு உயிர் தந்தவள் இம் மண்ணில் நடமாட விட்டவள் அன்னை வழிபடும் தெய்வம

**செல்வி செ.சோபிகா**
**புங்குடு தீவு .3.**

## எதையும் சாதிக்கும் வல்லமை மிக்கவர்

உறங்குவது போலும் சாக்காடு — உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு

தெய்வப் புலவர் வள்ளுவர் குறளுக்கு ஏற்ப மறைந்தவரே புங்குடுதீவு 7ம் வட்டாரத்தைச் (மடத்துவெளி) பிறப்பிடமாகவும் வட்டக்கச்சி, கொழும்பு -13 கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்டு அண்மையில் மறைந்த திருமதி சௌந்தரநாயகி கிருஷணபிள்ளை அவர்கள்.

இவர் முன்னாள் ஓய்வு பெற்ற ஆசிரியப் பெருந்தகை.அமரர் சொக்கலிங்கம் - நாகம்மா தம்பதிகளின் புத்திரியாவார் என்பது குறிப்பிடத்தக்கது. அம்மையார் அறிமுகமாகியது சிலகாலம். ஆனால் அது எனக்கு நீணடகாலங்கள் போல் எனது உள்ளத்தில் பதிந்துள்ளது.

தந்தை வழி மகளாக நேர்மைக்கு இலக்கணமாக வாழ்த்து நின்றார். நிறைந்த இறைபக்தி மிக்கவர். நீறில்லா நெற்றி பாழ் எனும் முதுமொழிக்கு இலக்கணமாய் எந்நேரமும் நெற்றியில் நீறணிந்த மேனியாளாகவே அம்மையார் காணப்படுவார். இவரின் இறைபக்திக்கு கிடைத்த பரிசுதான் இவரது வாழ்க்கைத் துணைவர் கிருஷ்ணபிள்ளை. அவர்கள் இருவரும் இணைந்து பெற்றெடுத்த குழந்தைகள் அறுவர் எனலாம். கிளிநொச்சி ஸ்ரீமுருகன் கிறைண்டிங் மில்ஸ். இவர்கள் இருவர் தம் ஸ்தாபனமாகும். இவருக்கு 36 வயது நிரம்பியகாலம் இவரது துணைவர் நயினை ஸ்ரீநாகபூசணி அம்மை மீது அளவிலாப் பக்தி கொண்டிருந்த காரணத்தால் அவர் தம் வசம் அழைத்துச் சென்றுவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகள் அறுவரையும்தனது அரவணைப்பில் வைத்திருந்து வெளிநாடு செல்லத் துணை நின்றார். தன்னையும் காத்து தனது குழந்தைகளையும் ஆளாக்கி வளர்த்துவிட்ட பெருமை இவரையே சாரும்.

எதையும் சாதிக்கும் வல்லமை தனக்கு மடத்துவெளி வயலூர் முருகன் பேரருள் எனக் கூறுவார். அண்மையில் பெருங்காட்டுக் கந்தன் குடமுழுக்கு விழாவினை கண்டு தரிசித்து யாழ்நகரில் பெறுதற்கரிய பேறான இறையின்பப் பேற்றினை பெற்றுக்கொண்டார். இவ் இன்பம் நாம்கேட்டு எமக்கு வராது. இப்பேறுபெற்ற அம்மையாரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திப்போமாக அவரது மக்கள் மருமக்களுக்கும் உறவுகளுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

வேலணை
வேணியன்
மாநகரசபை
உறுப்பினர்

## அம்மாவே தேடுகின்றோம்

அம்மா அம்மா அம்மா என்றே
கதறுகின்றோம். இறைஞ்சுகின்றோம்
நின் உடல் விட்டு நின் உயிர் பிரிந்த செய்தி
கேட்டு அழுகின்றோம் அம்மா
நீயோ மடத்துவெளி முருகன் பாதமதில்
கலந்தேன் என்கின்றாய்

நன்றாக வளர்த்தவள் எங்களை
இன்றோ சொல்லாமல் சென்றதேன்
சிறு வயதில் தந்தையை இழந்த எமை
உண்ணாமல் உறங்காமல் எமைக் காத்த எம்தாய்
இன்று நாம் கதறுவதைக் கேட்காமல் சென்றதேன்

எமைக் கண் இமை போல் வைத்துப் பார்த்த எம் தாயே
நீ அருகினில் இருந்திடும் பொழுது நின் அருமை
உணரவில்லை தாயே- இன்றோ
நின் அருமை உணர்கின்றோம். -இன்றோ
நீ அருகில் இல்லையே நினனை நெருங்கமுடியவில்லையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமை சுமந்தாய் அம்மா இரண்டைந்து மாதம்
சுமக்க துடிக்கின்றோம். அம்மா அடிப்பாதம்
உயிர்தந்து உடல் தந்து பின்
உதிரமும் தந்தாய் கல்வி தந்தாய், ஒழுக்கமும் தந்தாய்
வாழ்வில் முன்னோக்கி வைத்து மகிழ்ந்தாய்
நாமோ உம்கடன் தந்து முடிப்போம். எப்போ

அம்மா வே நீ தந்த பண்பட்ட வாழ்க்கை எப்போ
எம் அருந்தளங்கள் அதை என்றும் காப்போம்
எங்கள் அம்மாவே தேடுகின்றோம் நின் புன்னகையை
எங்கள் நிம்மதிக்காக

பிள்ளைகள்
சுவிஸ்

## மருமக்களின் மாறாத கண்ணீர

மாமி மாமி இனியாரை அழைப்போம்
செனந்தர்ய மலராக புன்னகைத்து நின்றவளே
இவ்வுலக வாழ்வதனை விட்டு
முருகன் திருவடிதனை சேந்தனையோ
என்று காண்போம் உன்முகம்
திருநீற்றுப் பூச்சுத் துலங்கும் உன் வதனம்
அன்பெலாம் ஒருங்கமைந்த தோற்றம்
அன்புடன் இனிதாக பழகும் சுபாவம்
துன்புறுவோர் துயர் துடைக்கும் தூய உள்ளம்
தன் கடன் முடித்தேன் என்றே
தரணி விட்டுச் சென்றீரோ
தள்ளாத வயதிலும் தளராத மனங்கொண்டீர்
எது வந்தாலும் முன்னின்று செய்திடுவீர்
ஆளுமைக்கு மாமி வல்லமைக்கு மாமி - இன்றோ
இன்முகம் காணாது துடிக்கின்றோம்.
தொலைதூரம் இருந்தாலும் தொலைபேசியில்
நின் நலம் நன்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்றிருந்தார் இன்றில்லை எனும் வள்ளுவர்
மெய்மொழி கண்டு எமை தேற்றுகின்றோம்.
எம் ஆருமை மாமியே

**ஓம்சாந்தி ஓம்சாந்தி ஓம்சாந்தி**

மருமக்கள்

சுவிஸ் - பிரான்ஸ்

**சுற்றத்தாரின் ஆதங்கம்**

நேற்றிருந்தாய் இன்றில்லை – உன்
நினைவுகள் தானிங்கு
நித்தமும் பல சுவை தரும்
நிறைவு நின் வாழ்வு

சுற்றத்தவர்

## உயிரற்ற நிலை....

அப்பம்மாஅம்மம்மா என்றே
பாசமுடன் அழைத்து வந்தோம்
இனியாரை அழைத்திடுவோம்.
அப்பம்மாவே அம்மம்மாவே
நின்னை பாசமுடன் நினைத்திருக்க
உன் உயிர்மூச்சு நின்ற செய்தி கேட்டோம்
உயிரற்ற நிலையானோம் சிலையானோம்.
அப்பம்மாவே அம்மம்மாவே
நின் நிமிர்ந்த நடை நின்றதேன்
நின் கம்பீரக் குரலை நிறுத்திக் கொண்டதேன்.- எம்முடன்
பண்பு கலந்து நகைச்சுவை கொண்டு
பேசிடும் நாவை சுருட்டிக் கொண்டதேன்
எமக்கு எல்லாம் ஆகிநின்றாய்
எல்லாம் கண்முன் நிற்கின்றதே
அப்பம்மாவே அம்மம்மாவே
ஜனனத்தில் எழுதிய கணக்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லை மரணம் என ஆறுதல் கொண்டோம்
நின் வஞ்சமிலா ஆத்மா சாந்தி கொள்ள
இறைவன் திருவடியை இறைஞ்சுகின்றோம்.

பேரப்பிள்ளைகள

சுவிஸ் - பிரான்னஸ்

## உன் நினைவே தவமன்றோ

ஒரு தாயின் வயிற்றினில்
கருவாக உருவானோம்
ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாய்
ஒரு மனதாய் இருந்து வந்தோம்
அன்பான பெரியக்காவே —நாம்
வாழ்ந்த வாழ்க்கையினை
அசைபோட ஆசை கொள்ள
இதயமெலாம் சிலுர்க்குதம்மா
அகம் நிறைய வருகுதம்மா
நின் நினைவுகளே
எக்காலம் மறப்போம்
உம்முடன் கூடிக்குலாவிய நாள்த்னை
எமை வாட்டிடும் நின்பிரிவு
உடலால் மட்டுமே உள்ளத்தால்
உணர்வால் அல்லவே
உன் நினைவே தவமன்றோ
உன் நினைவுக்கோ உறக்கமில்லை

சகோதராகன் சகோதரிகள்

### சௌந்தரிய திருமகளே

பெற்ற தாய்க்குப் பெரிதும் சமனான மெத்தப்
பழுத்த மெல்லினமாம்- என்ற
சௌந்தர்ய திருமகளே
சொத்தும் சொந்தமும் பாசமும் பந்தமும் போதுமென
சத்தமின்றி சடுதியாய் போனதேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தும் குரல் கேட்கா — சௌந்தர்ய
நாயகியே பித்துப் பிடிக்குதம்மா நீங்கள்
பிரிந்துதான் போனீர்களே
பாசத்தால் எமை அரவணைத்து
பரிதவிக்க விட்டுச் சென்றாயோ
பொன்போல் உமை — நாம்
போற்றுதற்கு காத்திருக்க
விண்பால் சென்றதேனோ
விரைந்து வந்து கூறிடுவீர்

மைத்துனர் - மைத்துனிமார் உடன்பிறவா சகோதரர்
அந்தக் குரல்..............

அணையாத அகல்விளக்கே
வாழ்க்கை நீர்க்குமிழி போன்றது
அநித்தியமானது அறிந்த உண்மையே
ஆனாலும் சுடுகின்றதே
அனுபவத்தில் எதிர்ப்பிடும் போது
மருமகன். அண்ணன் மகன் என்றே
வாஞ்சையுடன் அழைத்த அந்தக் குரல்
இன்றும் எம் காதில் ஒலிக்கின்றதே
சிறுவயதில் எம்மைப் பாசமுடன் - அழைத்த
அந்தக் குரலை இனி என்று கேட்போமோ
பொய்மை கலவாத நெஞ்சத்தால் உயர்ந்த
கள்ளமற்ற உள்ளம் வஞ்சகமற்ற பேச்சு
பிறக்கு உதவிடும் பரந்த மனம்
தன்னையும் கவர்ந்தனலா- இறைவன்
தன்னிடம் ஆட்கொண்டான்.
மாமி மாமி மாமி
அழியாத கோலமாய் என் நெஞ்சில் இருக்கும்
உங்கள் நினைவுகள் எப்போதும்
அணையாத அகல் விளக்குத்தூண்

மருமகன்

சி. ஜெயதாசன், லண்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன் பொன்னுடலைக் காண..........

கடைசிப் பிள்ளை நின் செல்லப்பிள்ளை
அடிவயிற்றில் சுமந்து பெற்று நிலவு காட்டி
அமுதூட்டி வளர்த்தவளே அம்மா
அன்று இடியாக அப்பாவும் மறைத்து போக
எங்களுக்காய் உயிர் சுமந்தே வாழ்ந்து நின்றாய்
மடிமீது இருத்தி உலகைக் காட்டி
வாழ வைத்துப் பறந்தவளே- நீதானே
எந்தன் குடியிருந்த கோயிலம்மா- விஜயனெ
கொஞ்சி எந்தன் தலை வருடும் நாள் எந்நாளோ
அம்மா என் அருமருந்தே ஐயோ தாயே
உன் பொன்னுடலைக் கூடக் காணாப்
பெருவினைச் செய்தவனாய் போனேன்
எந்தன் பிழைபொறுப்பாய் அம்மா
நின்பக்கம் நின்று திருமுறைதான் ஓதவில்லை
கடைசிமகன் செய்திடும் கடமைதான் ஆற்றவில்லை
கரண்டி கொண்டு பால் தான் பருக்கவில்லை
தீதறியாக் கடைசி மகன் நான் தாயே —உண்மை
தெரிந்தவள் நீ தெய்வமம்மா மன்னிப்பாயே

**ஓம் சாந்தி**

மகன்
விஜயகரன பிரான்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைசித் தம்பியின் ஆறாத்துயர்

பெரியக்காவாக உன்னை
தரணியில் பெறவே
தவம் செய்திருந்தோம் -இன்றோ
தர்ப்பணம் செய்தோம் அக்கா என்
முன்னே பிறந்தாலும் என்
முன்னே மறைந்தாலும் பேரின்பம் அடைவாயக்கா – அதை
பெரிதும் அறிவேன் நின்
நினைவு என் உள்ளமதில் நிலைத்திடும்.

தம்பி
சதாசிவன் (பிரான்ஸ்)

## அண்ணியின் கலங்கல்

அன்பான மைத்துனியே
அறிவின் திருவருவே
எம் அருகில் நீயிருந்து
அண்ணி என ஓடிவருவாய்
பண்பாலே எமை கவர்ந்தாய்
பாசத்தால் எமை அரவணைத்தாய்
பரிதவிக்க விட்டுச் சென்றாயே
பொன் போல உமை நாம்
போற்றுதற்கு காத்திருக்க
மின்னாமல் முழங்காமல்
விண்பால் சென்றதேனோ
விரைந்து வந்து கூறிடுவீர்

அண்ணி
சி. உலகேஸ்வரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சௌந்தரி அக்காவுக்கு அஞ்சலி

30.03.2013ம் திகதி எனது வாழ்வில் மறக்கமுடியாத நாள். மதிய உணவினை உண்பதற்காக ஆயத்தமானவேளை தொலைபேசி அழைப்பொன்று வந்தது. அழைப்பை ஏற்படுத்தியவர் அதிபர் எஸ்.கே.சண்முகலிங்கம் அவர்கள். உங்கள் சித்தப்பாவின் மகள் மயக்கநிலையில் உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கிறார் என்பதே அச்செய்தி. முதல்நாள் முருகன் கோவிலில் அவரைக் கண்டிருந்தேன. ஆனால் உரையாடும் சந்தர்ப்பம் கிட்டவில்லை. என்ன நடந்தது என்பதை அறிந்து உடன் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்காக விரைந்தேன். அக்காவின் உடலைத் தொட்டுப் பார்த்தேன். உயிர் பிரிந்து விட்டதை உணர்ந்தேன். பிள்ளைகள் பெறாமக்களுடன் தொடர்பினை எற்படுத்தி அடுத்த நடவடிக்கைக்காக தயாராகினோம்.

எமது பிறந்த மண்ணில் வாழ்ந்த உற்றார் உறவினர்கள் எனப் பெரும்பாலானோர் புகலிடம் தேடி சர்வதேசங்களில் வாழும் நிலை உடன்பிறந்த சகோதரர்கள் கூட 50 மைல்களுக்கப்பால் வாழ்ந்துவரும் நிலை அக்காவினை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதென்று சென்றநிலையில் அவரது உயிர் பிரிந்துவிட்டது.

எங்கள் சித்தப்பா சொக்கலிங்கம் அவர்கள் எம்மூரில் ஒரு கணித மேதையாக வலம் வந்தவர். ஆசிரியராக, அதிபராக உயர்ந்து இளைப்பாறியவர். சித்தப்பாவின் மேல் நாம் மதிப்பும் மரியாதையுடனும் செயற்பட்டவர்கள். சித்தப்பாவின் பிள்ளைகளுடன் இளவயதில் நாம் இணைபிரியாக சகோதரர்களாகவே வாழ்ந்து வந்தோம். ஆனால் கடந்த 35 வருடங்களுக்கு மேலாக உறவுகள் உள்நாட்டிலும் சர்வதேசங்களிலும் செறிந்து வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் உறவினர் என்பதைச் சொல்லித்தெரியும் நிலைக்கு எமது சமூகம் மாறிவிட்டது.

இளவயதில் சித்தப்பா தனது பிள்ளைகளுக்கு உரிய கல்வியினை வழங்கிய நிலையில் நாட்டில் நிகழ்ந்த அசாதாரண நிலையானது இளவயதினரைத் துரத்தியது. கல்வியினைத் தொடர முடவாகத்திற்குரிய பருவம் எய்தவே எங்கள் உறவினரும் புகழ்பூத்த குடும்பத்தில் உதித்தவரும் பிரபல வர்த்தகருமான பெரியதம்பி கிருஷ்ணபிள்ளை அவர்களுக்கு விவாகம் செய்து சீரும் சிறப்போடும் வாழ்ந்து ஆறு குழந்தைச் செல்வங்களைப் பெற்றுப் பெரு விருட்சமாகியது. இந்நிலையில் விவசாயத்திலும் ஈடுபாடு கொண்ட அத்தானுக்கு அரவம் தீண்டி இவ்வுலக வாழ்வினை இடையில் முடித்துக்கொள்ளும் நிலை ஏற்பட்டது. சௌந்தரி அக்கா தனது ஆறு பிள்ளைகளுக்கும் கல்வி கேள்விகளை உரிய பருவத்தில் கொடுத்திருந்த நிலையில் நாட்டில் புரையோடிப் போயிருந்த அசாதாரண சூழ்நிலையில் இளவயதினரை பாதுகாப்பாக வைத்திருப்பது கடினமானதை உணர்ந்த அக்கா பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு புலம்பெயர வைக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகி விட்டது.

இந்நிலையில் சௌந்தரி அக்கா பிள்ளைகளுக்கு உரிய பருவத்தில் விவாகங்களைச் செய்வித்து அவர்கள் சீரும் சிறப்போடும் வாழ்ந்து வருகின்றனர். அக்கா நினைத்தருந்தால் தனது பிள்ளைகளுடன் இணைந்து வெளிநாடுகளில் வாழ்ந்திருக்கலாம். ஆனால் தான் பிறந்த மண்ணை நேசித்து நாட்டிலேயே வாழ வேண்டும் என்ற நோக்கில் காலத்துக்குக் காலம் பிள்ளைகளைச் சென்று பார்த்துவிட்டு திரும்பும் பழக்கத்தைக் கொண்டிருந்தவர்.

முதுமையானது நோய் நொடிகளை வரவழைக்கும். அக்காவுக்கும் உடல்ரீதியாக அசௌகரியங்கள் ஏற்பட்டபோது அதற்குரிய பரிசோதனைகளை மேற்கொண்டு உரிய வைத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிபுணர்களின் ஆலோசனைப்படியே நடந்துவந்தவர். இந்நிலையில் இறைபக்தி கொண்டு அக்கா புகுந்த இடத்து முருகன் கோவிலின்ன கும்பாபிஷேக நிகழ்வுக்கு வந்திருந்தார். அப்போது அவரைக் கண்டிருந்த போதிலும் கதைக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கவில்லை. ஆனால் முகம் வாடியநிலையில் இருந்ததை அவதானித்தேன். அடுத்தநாள் அக்காவின் இறந்த உடலைப் பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டதை இட்டுப் பெரும் துயர் அடைந்தேன்.

அக்கா இன்று எம்மிடம் இல்லை. ஆனால் அவர் கணவனை இழந்த நிலையிலும் தனது குழந்தைச் செல்வங்களுக்கான சகல கடமைகளையும் நிறைவேற்றி அவர்கள் சீரும் சிறப்போடும் வாழ்வதைக் கண்டவர். இறப்பு என்பது எவராலும் தடுக்க முடியாததொன்று. இன்றைய மருத:துவ விஞ்ஞான வளர்ச்சி நிலையில் இன்னும் பல ஆண்டுகள் அக்கா வாழ்ந்திருக்கலாம். என்ன செய்வது? கிராஞ்சியம்பதியானின் அழைப்பை அவரால் நிராகரிக்க முடியவில்லை போலும். அவரது பாதார விந்தத்தில் அமைதிகாணச் சென்றுவிட்டார். எனினும் அக்கா தனது பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளை உற்றார் உறவினர்களுக்கு வழிகாட்டியாக இருப்பார் என்பது நிச்சயம். அக்காவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மடத்துவெளி பாலசுப்பிரமணியனைப் பிராத்திக்கின்றேன்.

## ஓம் சாந்தி.

உடன்பிறவாத் தம்பி
பேராசிரியர் கார்த்திகேசு.குகபாலன்,
யாழ்பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நினைவிலும் கருத்திலும்

நிலையாமையே உலகின் நிலைத்த பண்பு.

நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை — என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு.

என்றே வள்ளுவரும் உரைத்தார்.

உலகின் நிலையாமையை, நேற்றிருந்தார் இன்றில்லை எனும் இயல்பை உணர்த்தி நிற்பது இவ்வுலகு. ஆயிரம்தான் நிலையாமையை நாம் பேசினும் சிலரது மறைவு நம்மனதைப் பாதிக்கவே செய்கின்றது. என்னைப் பாதித்த மரணமாய் சௌந்தரி அக்காவின் மரணம் அமைந்து விட்டது. பிறப்பும் ஒன்றே. இறப்பும் ஒன்றே ஆயினும் மக்கள் மனங்களில் அன்பை, அனுதாபத்தைப் பெறுபவர் பூரண நல்வாழ்க்கை வாழ்ந்தவன் ஆகின்றான். நல்லவர்களின் வாழ்க்கை பெருமை அவரது இறப்பில் மக்களின் அனுதாபமாக கண்ணீராக திரள்கின்றது. இதற்கு எடுத்துக்காட்டாகவே, சௌந்தரி அக்காவின் மரணமும் - மரணச் சடங்கும் மரண ஊர்வலமும் திரண்டிருந்த மக்கள் கூட்டமும் திகழ்கின்றது. சௌந்தரி அக்காவின் பிறந்த இடப் பெருமை- புகுந்த இடப்பெருமை பாரம்பரியம் மிக்கது. புகழ்பூத்த ஒன்று. ஆனால் அந்தக் குடும்பப் பெருமையை அவர்கள் என்றும் வெளிப்படுத்தியதில்லை. சௌந்தரி அக்காவின் கொழும்பு இல்லம் ஊரில் இருந்து நம்பி வருவோர்க்குப் புகலிடம். அந்த இல்லத்தில் தங்கலாம். நம் அலுவல்களைப் பார்க்கலாம் என்றே நம்பிச் செல்லலாம். அன்பு, கருணை, பரோபகாரம், விருந்தோம்பல் என்றே அந்த வீடு கலகலக்கும். சௌந்தரி அக்கா அன்பே வடிவானவர். பக்திபூர்வமானவர். மிகுந்த சமயப்பற்றுள்ளவர்.

அவர் பலாப்பழம் போன்றவர். பலாப்பழத்தின் வெளித்தோலில் முள் அதன் உள்ளிருக்கும் சுவையோ ருசியோ மிகமிக அலாதியானது. அவரின் செயலில் பேச்சில் வேகம் இருக்கும். அது அவருக்கே உரித்தானது. அதில் வஞ்சம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவையும் இருக்கும். இளமையில் தன் இணையை இழந்தபோதுதான் அவரின் பெண்மையின் தலைமைத்துவப் பண்பு மிளிர்ந்தது. அவரின் ஆளுமையும் வல்லமையும் செயற்றிறனும் அவரின் குடும்பத்தை முன்னோக்கியது. சீரோங்க வைத்தது. அவரைப் பெருமைப்பட வைத்தது.

சௌந்தரி அக்காவின் இறுதிக் கணப்பொழுது வியப்புக்குரியது. அவர் வேண்டியவாறு அமைந்து விட்டது. பேரருள் ஆட்கொண்டுவிட்டது. முருகனின் குடமுழுக்குத் தரிசனம் தன் குலதெய்வத்தின் தரிசனம், பெருமாள் தரிசனம், சதுர்த்தி விரதத்தைத் தவறாது பிடிக்கும் அவர் விநாயகர் ஆலயத்தில் சதுர்த்தி பூசையில் கலந்துகொண்டார். இதுவே அவரின் இறுதியாக்கக் கலந்துகொண்ட நிகழ்வு. நோயால் பாயில் கிடந்து உழலாமல் உபாதைப்படாமல் எவர்க்கும் பாரமின்றி அவர் வேண்டியவாறு அவர்தம் இறப்பு அமைந்துவிட்டது.

அவர் பற்றி எழுதுவதற்குப் பலப்பல உண்டு. அவரின் தூலம் அக்கினியுடன் சங்கமமாகிவிட்டது. அவரின் ஆன்மா நிறைவான பேரருளில் நிறைந்திருக்கின்றது. அவர் தம் நினைவோ நம் குருதியில் கலந்து ஓடுகின்றது. நிலையாமையை உணர்ந்து தேறுவதை விட வேறு வழி என்ன? எம் கருத்திலும் நினைவிலும் நிலைத்துவிட்ட சகோதரியே நின் பிரிவைத் தாங்கும் இதயம் எமக்கில்லை. உமைப் பிரிந்தோம். எமைப்பிரிந்தாய் நின்நினைவுகள் என்றும் நிலைத்து நிற்குமே.

## இன்பமே எந்நாளும் துன்பமில்லை.

ஐ.திராவிடதாசன் (பரமேஸ்வரன்)

தலைவர் ஐங்கரன் சனசமூகநிலையம்,

புங்குடுதீவு – 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தலரங்காரம்

நாளென் செயும்வினை தானெென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடட்டுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்த தனி
வழிக்குத் துணைவடி வேலும் செங்கோடன் மயூரமுமே

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச்
செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்முகில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே.

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியில்
சேலார் வயல்பொழில் செங்கோட னைச்சென்று கண்டுதொழ
நாலா யிரம்கண் படைத்திலனே அந்த நான்முகனே

தண்டா யுதமும் திரிசூல மும்விழத் தாக்கியுன்னைத்
திண்டாட வெட்டி விழவிடு வேன்செந்தில் வேலனுக்குத்
தொண்டா கியவென் னவிரோத ஞானச் சுடர்வடிவாள்
கண்டா யடாவந்த காவந்து பார்செற்றென் கைக்கெட்டவே.

ஆவிக்கு மோசம் வருமா றறிந்துன் னருட்பதங்கள்
சேவிக்க என்று நினைக்கின்றி லேன்வினை தீர்த்தருள்வாய்
வாவித் தடவயல் சூழுந் திருத்தணி மாமலைவாழ்
சேவற் கொடியுடை யானே யமர சிகாமணியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

நாத விந்துக் லாதீ நமோநம
வேத மந்த்ரசொ ரூபா நமோநம
ஞான பண்டிதசாமி நமோ நம வெகுகோடி
நாம சம்புகு மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாகபந்தம யூரா நமோநம பரசூரர்
சேத தண்டவி நோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீத சம்ப்ரம வீரா நமோநம கிரிராஜ
தீப மங்கள ஜோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம அருள்தாராய்
ஈதலும் லும்பல கோலால பூஜையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈர முங்குரு சீர்பாதா சேவையு மறவாத
ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதே மனாகர
ராஜ கெம்பீர நாடாளு நாயக வயலூரா
பாதி மதிநதி போது மணிசடை
நாத ரருளிய குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா
காது மொருவிழி காக முற அருள்
மாய னரிதிரு மருகோனே
கால னெனையணு காம லுனதிரு
காலில் வழிபட அருள்வாயே
ஆதி யயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு சிறைமீளா
ஆடு மயிலினி வேறி யமரர்கள்
சூழ வரவரு மிளையோனே
சூத மிகவளர் சோலை மருவுசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைரவக் கடவுள்

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்

## வீரபத்திரக்கடவுள்

அடைந்தவி யுண்டிடு மமரர் யாவரும்
முடிந்திட வெருவியே முனிவர் வேதியர்
உடைந்திட மாமக மொடியத் தக்கனைத்
தடிந்திரு சேவகன் சரணம் போற்றுவோம்.

## சண்டேசுரர்

அண்டர் பிரானும் தொண்டர் தமக்கு
அதிபனாக்கி அனைத்து நாம்
உண்ட கலமும் உடுப்பனவும்
சூடுவனவும் உனக்காகச்
சண்டீசனு மாம்பதந் தந்தோம் என்று
அங்கவர் பொற் தடமுடிக்குத்
துண்டமதிசேர் சடைக் கொன்றை
மாலை வாங்கிச் சூட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

# நினைவில் நீங்கள்

எங்கள் குடும்பத்தின் பெருஞ் சுடர் குடும்பத் தலைவி
அமரர் கிருஷ்ணபிள்ளை சௌந்தரநாயகி
சாய்ந்தவுடன் பிரிந்த ஆன்மா வயலூர் முருகன்
பாதமதில் சேர்ந்ததெனக் கேள்வியுற்று உடன் வந்து
உதவிய பேராசிரியர் திரு.கா. குகபாலன் மற்றும்
உதவியவர்கள் மனப்பதற்றத்தை தணித்தவர்கள்
ஓடோடி வந்து ஆறுதலும் தேறுதலும் கூறியவர்கள்
தொலைபேசி தொலைநகல் மூலம் அனுதாபச் செய்திகள்
அனுப்பி எமக்கு ஆறுதல்தந்தவர்கள்
கண்ணீர் அஞ்சலி தந்தவர்கள் நேரில் வந்து அஞ்சலி
செலுத்தியவர்கள், இரங்கலுரை ஆற்றியவர்கள்
உள்நாடு வெளிநாடுகளிலிருந்து ஆறுதல் கூறிய உற்றார்
உறவினர்கள் நண்பர்கள்
அந்தியெட்டி, விட்டுக்கிரியை,ஆத்மசாந்திப் பிரார்த்தனையில்
கலந்து கொண்டவர்கள்
இவ் சௌந்தர்ய மலரை அழகுற பிரசுரிக்க உதவிய
எஞானம்ஸ் பிறிண்டேர்ஸ் கந்தர்மடம யாழ்ப்பாணம்
மற்றும் பல்வேறு வழிகளில் உதலி ஒத்தாசை புரிந்தவர்
உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் எங்கள்
குடும்பத்தின் நினைவில் நீங்காத நன்றிகள்

குடும்பத்தவர்
391 ஆறுமுகம் றோட்
வட்டக்கச்சி
கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

*சொக்கலிங்கம் + நாகம்மா*

*சிவபாதசுந்தரம் + உலகேஸ்வரி

*சௌந்தரநாயகி

சிவகாமசுந்தரி + இராசேந்திரம்

சாரதாம்பாள்(சாரதா) + பத்மநாதன்

சிவகுருநாதன் + மகாலெட்சுமி

சாவித்திரிதேவி + *சிவராஜலிங்கம்

சிவானந்தவள்ளி + விக்கினேஸ்வரலிங்கம்

சகுந்தலாதேவி + தவராஜா

சதாசிவன் + கனகேஸ்வரி

*பெரியதம்பி + தங்கம்மா*

*கிருஷ்ணபிள்ளை

கமலேஸ்வரி + தில்லையம்பலம்*

அருளம்பலம் + நாகலெட்சுமி*

நெல்லிநாதன் + பத்மாவதி

அன்னபூரணம் + தில்லைநாதன்*

நடராஜா + சரஸ்வதி

**சௌந்தரராஜன் + தில்லைச்சொரூபி**

**சசிமாலா + விக்கினேஸ்வரன்**
- கீர்த்தனா
- அனிதா
- அகர்ஷன்

**பிரபாகரன் + ரேவதி(தேவகி)**
- பிரணவி
- கார்த்திகன்
- கஸ்தூரி

**ஸ்ரீகரன் + சுபா(மதாகினி)**
- கிருத்திகன்
- கிருஸ்ணவி

**உதயரமணி + ராசன் (அம்பாள்)**
- ஜனனி
- ஆரபி
- மிருஷா

**விஜயகரன் + அனோஜா**
- கார்மிதன்
- சௌமியா

* அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org